**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**S.C. No. 61 / 2022**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 14.11.2024 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Selvaraj(PW 1 ) | வயது | 38 |
| தந்தை பெயர் | Thavasi | மதம் | |
| இனம் | | வட்டம் | |
| விலாசம் | Manali, Chennai | | |

எதிரிகள் ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் மணலியில் குடியிருந்து வருகிறேன். நான் மணலி ஸ்ரீனிவாச பெருமாள் கோவில் தெருவில் மளிகைக் கடையை நடத்தி வருகிறேன். கடந்த 04.08.2021 அன்று மதியம் 3.30 மணியளவில் நான் எனது மளிகைக் கடையை அடைத்துவிட்டு மதியம் வீட்டிற்கு சாப்பிடுவதற்காக சென்றுக் கொண்டிருந்தபோது எனது மைத்துனர் ஜெய்கணேஷ் என்பவர் எனது கைபேசியில் தொடர்வு கொண்டு என்.எஸ்.கே தெருவில் எனது அண்ணன் ஜெயராஜ் பேரில் வாங்கிய இடத்தை எனது பெரியப்பா மகன் உமேஷ்பாண்டியும் அவரும் பார்த்துவிட்டு அவர்களிடம் அருகேயிருந்த 4 நபர்கள் தகாத வார்த்தையில் பேசி அவர்களை அடிக்க வருவதாக என்னிடம் சொன்னார். அதன் பேரில் நான் இருசக்கர வாகனத்தில் அந்த இடத்திற்கு சென்றேன். அப்போது அங்கிருந்த 4 நபர்கள் எனது பெரியப்பா மகன் உமேஷ்பாண்டியையும் எனது மைத்துனர் ஜெய்கணேசையும் அடித்து கொண்டிருந்தனர். நான் அவர்களை தடுக்க சென்றபோது பின்னர் பெயர் கேட்டு அறிந்த ஜெபக்குமார் என்பவர் கையால் எனது கழுத்தைப்பிடித்து தள்ளினார். நான் அவர்களிடம் பிரச்சனை வேண்டாம் எனகூறினேன். இருந்தபோதிலும் அவர்கள் இருவரையும் அடித்தனர். அருகே இருந்த மசூதி வாசலில் அடுக்கி வைத்திருந்த கண்ணாடி ஸ்லேப்களை பின்னர் பெயர் கேட்டறிந்த ஜெபக்குமார், சமரசம், லெனின் மற்றும் அன்புகண்ணன் ஆகியோர் எடுத்து எனது பெரியப்பா மகன் உமேஷ்பாண்டியின் மீது தலையில் போட்டனர். எனது மைத்துனர் தடுக்க சென்றபோது அவரது தலையிலும் எதிரிகள் கண்ணாடியால் அடித்தனர். பின்னர்

எனது பெரியப்பா மகன் உமேஷ்பாண்டியை அவர்களில் ஒருவர் உடைந்த கண்ணாடி துண்டை எடுத்து வயிற்றின் இடது பகுதியில் குற்றினார்கள். அவர்கள் இருவருக்கும் உடல் முழுவதும் ரத்த காயங்கள் ஏற்பட்டது. காயம்பட்ட அவர்களை எனது அண்ணன் ஜெயராஜ் என்பவா் முதலில் அவர்களை அருகேயிருந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். பின்பு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ஸ்டேன்லி மருத்துவனைக்கு அழைத்து சென்றார். பின்பு காவல் நிலையம் சென்று சம்பவம் சம்மந்தமாக புகாரளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரைதான் நான் காவல் நிலையத்தில் அளித்தேன். அந்த **புகார் அசா 1** ஆகும். எதிரிகளின் உறவினரான பாஸ்கரர் என்பவரிடமிருந்து எனது அண்ணன் ஜெயராஜ் பெயரில் நிலம் வாங்கப்பட்டது. அதை நாங்கள் விற்க ஆட்களை அழைத்து செல்லும்போதெல்லாம் அவர்கள் பிரச்சனை செய்து வந்தனர்.

எதிரிகளை அடையாளம் காண முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.